**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**
***Ang Mo Kio Tamil Methodist Church***

***14th செப்டம்பர் / September 2025 ஞா யிறு ஆராதனை / Sunday Service***

Youth Sunday

| | |
|---|---|
| ✝ **ஆராதனைக்கு அழைப்பு**<br>Call to Worship | ***மிஸ். ஷீனா***<br>Ms. Sheena |
| **இறைவணக்கப்பாடல்**<br>Introit | ***பாடகர் குழு***<br>Choir |
| **ஜெபம்**<br>Prayer | ***மிஸ். ஷீனா***<br>Ms. Sheena |
| ✝ **தொடக்க பாடல்**<br>Opening Song | ***சபையார் இணைந்து***<br>Congregation |

**யுத்தம் செய்வோம் வாரும்**

***யுத்தம் செய்வோம் வாரும்,***
***கிறிஸ்து வீரரே!***
***இயேசு சேனை கர்த்தர்***
***பின்னே செல்வோமே!***

*1. வெற்றி வேந்தராக*
*முன்னே போகிறார்;*
*ஜெயக் கோடி ஏற்றி*
*போர் நடத்துவார்*
*யுத்தம் செய்வோம் வாரும்,*
*கிறிஸ்து வீரரே!*
*இயேசு சேனை கர்த்தர்*
*பின்னே செல்வோமே!*

*2. கிறிஸ்து வீரர்கள், நீர்*
*வெல்ல முயலும்;*
*பின்னிடாமல் நின்று*
*ஆரவாரியும்!*
*சாத்தான் கூட்டம் அந்த*
*தொனிக்கதிரும்;*
*நரகஸ்திவாரம்*
*அஞ்சி அசையும்!*

*3. கிறிஸ்து சபை வல்ல*
*சேனைபோன்றதாம்*
*பக்தர் சென்ற பாதை*
*செல்கின்றோமே நாம்*
*கிறிஸ்து தாசர் யாரும்*
*ஓர் சரீரமே*
*விசுவாசம், அன்பு,*
*நம்பிக்கை ஒன்றே.*

*4. கிரீடம், ராஜ மேன்மை*
*யாவும் சிதையும,*
*கிறிஸ்து சபைதானே*
*என்றும் நிலைக்கும்*
*"நரகத்தின் வாசல்*
*ஜெயங்கொள்ளாதே,"*
*என்ற திவ்விய வாக்கு*
*வீணாய்ப் போகாதே*

| | |
|---|---|
| ✝ **மாறி வாசித்தல் *37*ம் ஞாயிறு**<br>***“சங்கீதம் 111”*** | ***சபையார் இணைந்து***<br>Congregation |

**“ கர்த்தருக்கு நன்றி சொல்லுங்கள் ”**

Psalter Reading “Psalm 111”

| | |
|---|---|
| ✝ ***தந்தை போற்றி***<br>Gloria Patri | ***சபையார் இணைந்து***<br>Congregation |
| ***துதி ஆராதனை***<br>Singspiration | |
| ***ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்***<br>Thanksgiving & Pastoral Prayer | |
| **பரமண்டல ஜெபம்**<br>Lord’s Prayer | ***சபையார் இணைந்து***<br>Congregation |
| ✝ **காணிக்கை பாடல்**<br>Offertory Song | ***சபையார் இணைந்து***<br>Congregation |

***எங்கும் புகழ் யேசு ராசனுக்கே***

**எங்கும் புகழ் யேசு ராசனுக்கே**
**எழில் மாட்சிமை வளர் வாலிபரே!**

**உங்களையல்லவோ உண்மை வேதங்காக்கும்**
**உயர்வீரரெனப் பக்தர் ஓதுகிறார்**

*1. ஆயிரத் தொருவர் ஆவீரல்லோ நீரும்*
*அதை அறிந்து துதி செய்குவீர்,*
*தாயினும் மடங்கு சதம் அன்புடைய*
*சாமி யேசுவுக்கிதயம் தந்திடுவீர்.*

*2. கல்வி கற்றவர்கள் கல்வி கல்லாதோர்க்குக்*
*கடன்பட்டவர் கண்திறக்கவே;*
*பல்வழி அலையும் பாதைதப்பினோரைப்*
*பரிந்து திருப்ப நிதம் பார்த்திடுவீர்.*

*3. தாழ்மை சற்குணமும் தயை காருண்யமும்*
*தழைப்பதல்லோ தகுந்த கல்வி?*
*பாழுந்துர்க்குணமும் பாவச் செய்கையாவும்*
*பறந்தோடப் பார்ப்பதுங்கள் பாரமன்றோ?*

*4. சுத்த சுவிசேஷம் துரிதமாய்ச் செல்ல*
*தூதர் நீங்களே தூயன்வீரரே;*
*கர்த்தரின் பாதத்தில் காலைமாலை தங்கிக்*
*கருணை நிறை வசனம் கற்றிடுவீர்.*

✝ **பூலோகத்தாரே யாவரும்** — **சபையார் இணைந்து**
Doxology — Congregation

✝ **திருமறைப் பாடம்** — **மாஸ்டர். ஷான்**
***பிரசங்கி 3 : 9 - 15*** — **மிஸ். எலிசபெத்**
Scripture Reading — Master. Shaan (English)
Ecclesiates 3 : 9 - 15 — Ms. Elizabeth (Tamil)

**அருளுரை** — **திரு. எலிஷா பிலிப்**
Sermon — Mr. Elisha Philip

✝ **அர்ப்பணகீதம்** — **சபையார் இணைந்து**
Offertory & Closing Song — Congregation

**என்னை ஜீவபலியாய்**

**என்னை ஜீவபலியாய் ஒப்புவித்தேன்,**
**ஏற்றுக் கொள்ளும், யேசுவே.**

**அன்னை தந்தை உந்தன் சன்னிதி முன்னின்று**
**சொன்ன வாக்குத்தத்த மல்லாது, இப்போது**

*1. அந்தகராத்தி னின்றும், பவப் பேய்*
*அடிமைத் தனத்தி னின்றும்,*
*சொந்த ரத்தக் கிரயத்தால் எனைமீட்ட*
*எந்தையே உந்தனுக்கிதோ! படைக்கிறேன்*

*2. ஆத்ம சரீரமதை உமக்கு*
*ஆதீன மாக்கி வைத்தேன்;*
*பாத்ரமதாய் அதை பாவித்துக் கொள்ளக்*
*காத்திருக்கின்றேன், கருணைசெய் தேவா.*

*3. நீதியி னாயுதமாய் அவயவம்*
*நேர்ந்து விட்டேன் உமக்கு;*
*ஜோதி பரிசுத்த ராலய மாகவே*
*சொந்தமாய்த் தந்தேன் என்றன் சரீரத்தை*

**அறிவிப்புகள்**
Announcements

MYF Presentation

✝ **மனப்பாட வசனம்** — **சபையார் இணைந்து**
Memory Verse — Congregation
***எபேசியர் 6 : 6***
Ephesians 6 : 6

***6. மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்.***

✝ **முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ **ஆசீர்வாதப் பாடல்**
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** ⁄ **Indicates Congregation standing**